
# பூச்செண்டு

ஏப்ரல் 1969

விலை 30 காசு



www.thamizham.net - Free E Books. No TM 14715



இ. ஜே. சுந்தர், பி. எஸ்ஸி.
பொறுப்பாசிரியன்

[முதலிலேயே சொல்லி விடுகிறேன்—நான் எழுதப் போகும் இச்சிறுகதை வாழ்வில் தினம் தினம் சந்திக்கும் சூழ்ல்களைக்கண்டு சிந்தித்துப்பார்த்து, ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்று நினைக்க வைப்பதற்காக எழுதுகிறேன். சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே இது பிடிக்கும். மற்றபடி டன்லப் பில்லோ போட்ட ஸ்பிரிங் கட்டிலில் சாய்ந்துகொண்டு பொழுது போக்குக்காக மட்டுமே கதை படிக்கும் ரசிகர்களின் வார்த்தைகளில் சொல்வதானால் என் கதை ஒரு "ட்ரை ஸ்டப்"]

அயர்ந்து உழைத்த களைப்பு ..டலையும் உள்ளத்தையும் வருத்த ..ாலை நேரத்திலும் சூடு குறையாத ..ார் சாலையில் நடந்து வந்து ..கொண்டிருந்தேன்.


எப்போது வீடுபோய் சேர்ந்து ..ிழுவேன் என்று ஒரு அத்துமீறிய ..ளைப்பு உடலெங்கும் பரவியிருந் ..து.

பஸ்ஸுக்காக நிலையம் நோக்கி ..டந்து சென்றேன். அதோ தூரத் ..ில் பஸ் வருகிறது! என்றால் ஓட ..டியாத தள்ளாமை இருப்பினும் ..ஸ்ஸை விட்டு விடுவோமே ..ன்ற நிலைக்காக ஓடி எப்படியோ ..ஸ்ஸை நெருங்கி விட்டேன். ..ஸ்ஸின் முதல் படியில் ..ாலெடுத்து வைக்கும் போது, .."ட்ரீல் ட்ரீல்" கண்டக்டரின் ஊதலொலி ஒலித்து விட்டது. விளைவு: பஸ் கிளம்பி விட்டது. நான் பஸ்ஸிலிருந்து தவறி சாலையில்விழுந்தேன். எழுந்துநின்றேன் ஏமாற்றத்தோடு. என்னைச் சுற்றி லேசாகப் பார்வையை சுற்றி விட்டேன். கல்லூரி மாணவர்கள் சிலரும் மாணவியரும் என்னை ஏளனப் புன்னகையுடன் நோக்குவதாக உணர்ந்தேன். உடல் முழுவதும் ஓர் அவமான உணர்ச்சி! நான் யாரையும் பார்க்க விரும்பாத நிலையில் ஓர் ஓரமாக சென்று பஸ் வரும் திசை நோக்கி பார்வையைச் செலுத்தினேன். பஸ் மீண்டும் வருவதாகக் காணேம். என் கையிலே கடிகாரம் இல்லை. பக்கத்தில் ஒரு பள்ளிச் சிறுவன் நின்றிருந்தான். அவன் கையிலே கடிகாரம் இருந்தது.


www.thamizham.net - Free E Books No TM 14715

"மணியென்ன தம்பி?" என்றேன். அவன் என் பேச்சைக் காதில் வாங்கிக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. எனக்கு அது ஒரு பெரும் ஏமாற்றமாக இருந்தது. நண்பனிடம் ஏதோ மும்முரமாகப் பேசிக் கொண்டிருந்தான். மீண்டும் அவனிடம் கேட்பதா வேண்டாமா என்று யோசிப்பதற்குள் பஸ் வந்து நின்று கிளம்பிக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். பஸ் கிளம்புவதற்குள் என் கையைக் காட்டினேன். நான் கை காட்டியதை வண்டியோட்டி கவனித்தார். நன்றாகக் கவனித்தார். எனினும் என்னை அவர் மதித்ததாகத் தெரியவில்லை. வண்டி கிளம்பி விட்டது. எப்படியோ மீண்டும் முயற்சி செய்து ஏறி, மறுபடி விழுந்து அவமானப்பட எனக்கு விருப்பமில்லை. எனவே பஸ்ஸில் நான் ஏறவில்லை; ஏனோ தெரியவில்லை தொடர்ந்தாற் போன்ற மன வருத்த மூட்டும் நிகழ்ச்சிகளாக நடந்து வந்தன. எல்லார் மீதும் வெறுப்பாக இருந்தது. யாருடைய தயவும் எனக்குத் தேவையில்லை என்ற தன்னம்பிக்கையில் வீட்டிற்கு நடந்தே செல்லத் துணிந்தேன்.

வீட்டிற்கு தூரம் குறைந்தது மூன்று மைல் இருக்கும். உடல் முழுவதும் தாங்க முடியாத களைப்பு. அதனை விட மனம் முழுவதும் ஏமாற்றமான உணர்ச்சிகள். ஏன் இப்படி மனிதர்கள் சில சமயங்களில் பிறர் மன உணர்ச்சிகளை மதிக்கமுடியாமல் நடந்து கொள்கிறார்கள்!? பிற மன உணர்ச்சிகளை மதிப்பதால் அவர்களிடமிருந்து விலை மதிப்பான பொருட்கள் ஏதாவது இழக்கப்




www.thamizham.net - Free E Books. No TM 14715



"நீ உன் கணவரிடம் முதல் தேதியும் இருபதாம் தேதியும் மகிழ்ச்சியாக இருக்கிறாயாமே."

"முதல் தேதி சம்பளம் வருகிறது, லாட்டரி சீட்டு வாங்குகிறோம். இருபதாம் தேதி லாட்டரி சீட்டு குலுக்குகிறார்கள்."

---

பட்டு விடுகின்றனவா? ஒவ்வொரு சமயங்களில் இப்படி நடந்து கொள்ளும் மனிதர்களைக் காணும் போது இவர்களெல்லாம் என்ன மன உணர்ச்சிகளே அற்ற சடப் பொருட்களா என்று தோன்றும்.

நான் பஸ்ஸில் ஏறுவதை கண்டக்டர் கண்டார். இருப்பினும் ஏதோ ஒரு மன உணர்ச்சிகள் மதிக்கப்படாத வகையில் அவர் நடந்து கொண்டார். அதற்கு அவரிடம் நான் காரணம் கேட்டால், "கடமை சார்! பஸ் சரியான நேரத்திற்குப் போய்ச்சேர வேண்டாம்?" என்றபடி கட்டாயமாக 'கடமை' உணர்வுகள் நிறைந்த பதில் வந்திருக்கும். அப்படி அவர் சொல்லியிருந்தால், "கடமையை நீ சட்டப்படி அனுசரிப்பதாக இருந்தாலும் ஒன்று உன்னைக் கேட்கிறேன்: சட்டம் மனிதர்களுக்காகவா அல்லது மனிதர்கள் சட்டத்திற்காகவா?" என்று உணர்ச்சியுடன் கேட்டிருப்பேன். ஆனால் பல சமயங்களில் அப்படி கேள்விகள் கேட்பதற்கும் உண்மைகளை நிலை நாட்டுவதற்கும் சந்தர்ப்பங்கள் துணை செய்வதில்லை.

அடுத்து நான் கீழே விழுந்தவுடன் கேலிப் புன்சிரிப்பு சிரித்த காளையர்களைப் பற்றிச் சிந்தித்தேன். அவர்கள் கற்பது பல்கலைக் கழகத்தில் ஓர் உயர்ந்த கல்வி. தன்னைப்போல பிறரையும் மதித்து பிறர் துன்புறும் போது தன்னையும் அந்தத் துன்ப நிலையில் இருத்திப் பார்க்காத ஒரு மன வளர்ச்சி ஏற்படாத வரையில் கல்வி கற்றுவிட்டதாக இவர்கள் கட்டாயமாகப் பெருமைப் பட முடியாது. அதுமட்டுமல்ல எதிர்கால உலகில் சமுதாயத்தின் முன் நிற்கும் மிகப் பெரிய சிக்கல்களை, மனித சமுதாயத்தின் ஓயாத அழுகுரலை ஆற்ற வேண்டிய இவர்கள், கல்லூரிகளில் சமூக நலனைப் பற்றி எழுத்தளவிலே படித்து, அதில் பெரிய மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்று மிகச் சிறிய தனி நபரின் ஒரு துன்ப நிலையைக் காணும் போது புன்னகை புரியும் நிலையை நான் எண்ணி மனதளவில் அவர்களுக்காக இரு சொட்டுக் கண்ணீர் சிந்தினேன்.

பிறர் மணி கேட்டால் பதில் சொல்வது கூடத் தங்கள் மதிப்பிற்கு குறைவை ஏற்படுத்திவிடும் என்ற எண்ணத்தை இந்த மிகச் சிறிய வயதிலேயே கொண்டிருக்கும் அந்தச் சிறுவனைப் பற்றி நினைத்துக் கொண்டு களைப்புடன் தொடர்ந்து நடந்தேன் இத்தகைய எண்ணங்களை அழித்து உயர்ந்த எண்ணங்களை செயலளவில், இளம் உள்ளங்களில் பள்ளிகள் வளர்க்க முற்படாத வரை பள்ளிக் கல்வி அறிவை வளர்க்கின்றது என்று சொல்வது சரியே அல்ல என்று தோன்றியது. இவர்கள் தானே கல்லூரிக்காளையராக வருகின்றனர் என்று முன்பு நினைத்ததுடன் தொடர்பு படுத்தி எண்ணிப் பார்த்தேன்.

www.thamizham.net - Free E Books No TM 14715

நீண்ட கோடை விடுமுறைக்காலம் நம் முன்னே நிற்கிறது. சீட்டாட்டத்திலும், திரைகானத்திலும், சினிமாவிலும் பெரும் பகுதி செலவழிக்கும் நாம் அறிவூட்டும் நல்ல புத்தகங்களைப் படிக்க எவ்வளவு நேரம் செலவழிக்கிறோம் என்று எண்ணிப் பார்ப்போம்!

---

எண்ண அலைகளிலே நீந்திக் கொண்டே சென்றதால் நடந்து வந்த தூரம் அதிகமாகப் படவில்லை. தொடர்ந்து வந்த எண்ண வோட்டத்தில் இறுதியாக நான் சந்தித்த ஏமாற்ற நிகழ்ச்சி என் மனக்கண் முன் நின்றது. பஸ் கிளம்பும் தறுவாயில் கையைக் காட்டி சில விநாடிகள் வண்டியை நிறுத்தும்படி ஓட்டுனரிடம் சைகை செய்கிறேன். நான் வந்து ஏறுவதற்கு ஆகும் சில விநாடிகளில் பஸ் காலதாமதமாகப் போக நேரும் என்ற ஒரு சாதாரணபதிலை நிறுத்திக் கேட்டால் வண்டியோட்டி விடை யளிப்பாரானால், கூட்டம் நிறைந்த இந்தப் பெரும் நகரத்தின் வீதிகளில் எத்தனை முறைகள் வண்டி குறுக்கீடுகளால் நிறுத்தப்படுகிறது. நான் கையைக் காட்டி நிறுத்தியதும் ஒரு குறுக்கீடாக இருந்து விட்டுப் போகட்டுமே! பல நிமிடங்கள் குறுக்கீடுகளால் வண்டி தெருக்களில் நிறுத்தப் படும் போது சில விநாடிகள் ஒரு மனிதரை வண்டியில் ஏற்ற செலவிடப்பட்டது தேவையற்றதாக ஓட்டுனருக்குத் தோன்றுமானால் நிச்சயமாக தனி மனிதரின் தேவைகளும், அவர்களது நலன்களும் தேவையற்றவையா? அத்தகைய எண்ணங்கள் நிறைந்த மனிதர்கள், மனிதர்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளை ஓட்டும் நிலை மிகமிக வருந்தத்தக்கது என்று வருந்தினேன்.

நான் வருந்தினேன் தனி மனிதனாக! சமுதாயம் என்பது ஒரு "பூச்செண்டு" நாம் வாழ்க்கையில் சந்திக்கும் எல்லா நபர்களும் மலர்கள். மலர்களின் தன்மையைப் பொறுத்துத் தானே சமுதாயம் என்ற பூச்செண்டு உருவாக முடியும். தான் சந்தித்த கண்டக்டரும் பள்ளி மாணவனும், ஓட்டுனரும் கல்லூரிக்காளையரும் சமுதாயத்தின் சில மலர்கள். பூச்செண்டு இன்ப மணம்வீசுவதோ, குமட்டல் தரும் நாற்றம் தருவதோ அதில் தொடுக்கப்பட்ட தனிப் பூக்களைத் தானே பொறுத்தது!

பெரும் இன்னல்கள் தனி மனிதனுக்கு நிகழும் போது தான் சமுதாய அளவில் அவற்றை நினைத்துப் பார்க்கும் ஒரு சந்தர்ப்பம் நமக்குக் கிடைக்கிறது என்பது எவ்வளவு உண்மை! சமுதாயத்தின் சிக்கல்களை நினைத்துப் பார்த்து, அவற்றை விடுவித்துத் தூய்மையாக்க தனி மனிதன் அந்த சிக்கல்களில் சில முறைகள் விழுந்து பார்க்க வேண்டும்.

இப்படியாக எழுச்சி மிக்க முறையில் தொடங்கிய எனது சிந்தனை அலைகள் ஒரு வழியாக அமைதியடைந்து தத்துவ நிலையில் சீர்தூக்கும் பக்குவத்தைப் பெற்றது என்றால் அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று சிந்தனையாளன் எனது மனம் சிந்தித்து சிந்தித்து அந்த ஏமாற்ற நிகழ்ச்சிகளை வாழ்க்கைப் பாடமாக ஏற்றது; மற்றொன்று எனது வீடு கூப்பிடு தூரத்திற்கு நெருங்கி எனது மனதிற்கு இன்பமூட்டியது!

---

www.thamizham.net - Free E Books No TM 14715